# சித்தர் பாடல்களில் அறச்சிந்தனைகள்

26

**திருமதி இரா. இந்திரா**
**முனைவர்பட்ட பகுதிநேர ஆய்வாளர்**
**தமிழாய்வுத்துறை, திரு ஆ கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி**
**திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.**

**ஆய்வுச்சுருக்கம்:**

அறம் பற்றிய விளக்கமும் தமிழ் இலக்கியங்களில் அறக்கருத்துகள் இடம்பெற்றுள்ள விதம் கூறி சித்தர் பாடல்களில் அறக்கருத்கள் இடம்பெற்றுள்ள தன்மையை இல்லறம், கூடா ஒழுக்கம், கணவன் மனைவி பிணைப்பு, இல்வாழ்வான் கடமை, துறவறம், போலித்துறவு, சமூக அறச்சிந்தனைகளாக தீண்டாமை ஒழிப்பு, சமத்துவ சிந்தனை, கற்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் சமம், பிற உயிர்களை நேசித்தல், பொருளாசை விலக்கல், போதைப் பொருளைத் தவிர்த்தல் என்ற அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது..

**திறவுச்சொற்கள்:** சித்தர் பாடல்களில் அறம், இல்லறம், துறவறம், சமூக அறம்

**முன்னுரை:**

இவ்வுலக வாழ்க்கையில், தனிமனிதனும் சமுதாயமும், நலமுடன் வாழ்வதற்கும் முன்னேற்றம் அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்று கருதியே, நம்முன்னோர்கள் அறவொழுக்கத்தை வலியுறுத்திச் சென்றுள்ளனர். இதனை நாம் சங்க இலக்கியம் முதற்கொண்டு பல இலக்கியங்கள் வழியாக அறியலாம். குறிப்பாக இல்லறம் காத்தல், உண்மைத் துறவு, தனிமனிதன் பிறரோடு கூடிவாழுகின்றபொழுது கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகள் மற்றும் தவிர்க்க வேண்டிய தீய செயல்கள் எனக் கூறலாம். யோகம், ஞானம், வானியல், மருத்துவம் பற்றி விரிவாக எடுத்துரைத்த சித்தர் பாடல்களிலும் இத்தகைய அறச்சிந்தனைகள் வெளிப்படுவதைக் காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது..

**அறம் – விளக்கம்:**

"'அறு' என்னும் வினையடியைக் கொண்டு பிறந்ததே அறம் என்னும் சொல்லாகும். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, துண்டி, வேறுபடுத்து என்று பலப்பொருள்கள் வழங்கப்படுகின்றன. இச்சொல்லாய்வின் அடிப்படையில் 'அறம்' என்னும் சொல்லிற்கு "மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே – முழுநிறை வடிவமே அறம்" என்றும், "பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும்

தீவினையை அறுத்தெறிவதே அறம்” என்று ஆன்மிக விளக்கமும் தரப்படுகிறது”.[1]

இதனை ஆங்கிலத்தில் ‘Ethics’ என்பர்.. இதைத் தமிழில் அறவியல் என்பர். அறவியல் என்பது, சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் நடத்தையைப் பற்றி ஆராயும் கலை” என்று பொருள். பொய் ஒழுக்கத்தால் மனத்தெளிவின்றி வாழும் மக்களை நல்வழிபடுத்த மெய்யறிந்த சான்றோர்கள் கூறிய அறிவுரைகளே அறவுரைகளாகும். மேலும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை வாழ்க்கை உறுதிப்பொருள்களில் அறமே முதன்மையானதாக விளங்குகிறது என்பதால் அவற்றைக் காத்தல் அவசியமானதாகிறது..

**தமிழ் இலக்கியத்தில் அறச்சிந்தனைகள்:**

இலக்கியத்தின் நோக்கம் கற்பவரை இன்புற வைப்பது. அது இன்றேல் இலக்கியமாகா. ‘அறம் செய விரும்பு’ என்னும் ஔவையின் ஆத்திசூடி தொடர் அறிவுரை மொட்டாய் வளர்கிறது. அதையே சுவைப்பட வாழ்வியல் நிகழ்வோடு இணைத்து கதையாக உரைக்கும்போது வாசமுள்ள மலராய் மலர்கிறது. இன்பம் ஏற்படுகிறது. இவ்வாறே சிலப்பதிகாரம் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்”, உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்” என்றும் கம்பராமாயணம், “பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப” என்றும் அறச்சிந்தனைகளைச் சுவைபட வாழ்வியலோடு இணைத்துச் சொல்கிறது. இத்தகைய அறச்சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தில் விரவி காணப்படுகிறது. இது சித்தர் பாடல்களிலும் மிளிர்வதைக் காணமுடிகிறது.

**சித்தர் பாடல்களும் அறச்சிந்தனைகளும்:**

உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னர் உயிரோடு உடன்வருவது அறமே என்பதையும் ஒவ்வொருவர் உள்ளும் இருக்கும் இறைவனை அடைய அற ஒழுக்கமே அவசியம் என்பதையும்

“பெண்டாட்டி மந்தைமட்டும் வருவாள் பெற்ற
பிள்ளை மசானக் கரையின் மட்டும்
தொண்டாட்டுத் தர்மம் நடுவினி லேவந்து
சேர்ந்து பரகதி தான்கொடுக்கும்”[2] - என்று கொங்கணர் அறிவுறுத்துகிறார்.

“ஏழை பனாதிக ளில்லையென் றாலவர்க்கு
இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும்
நாளையென் றுசொல்ல லாகா தேயென்று
நான்மறை வேதம் முழங்குதடி” [3] - என்று கொங்கணரும்

“ஐம்புலனை வென்றவர்க்கு அன்னதானம் ஈவதால்
நம்புலன்கள் ஆகிநின்ற நாதருக்கது ஏறுமே” [4] -

என்று சிவவாக்கியரும் அறத்தின் வழிவகையினையும் எடுத்துரைக்கின்றனர்.

“புண்ணியத்தை மறவாதே – காமியென்று

நடவாதே"[5] - என்று அகத்தியரும் அறத்தின் தன்மையை விதந்துரைக்கின்றார். இத்தகைய அறத்தை இல்லறம், துறவறம், சமூக அறம் என்று மூன்று பகுப்பாக பிரித்து வகைப்படுத்தலாம்.

**இல்லறம்:**

சமூக கட்டமைப்பிலும் பண்பாட்டு கலாச்சார மேம்பாட்டிலும் இல்லறமே முதன்மையாகக் கருதப்படுகிறது. சித்தர்களின் தவ வாழ்விற்கு இல்லறம் அச்சுறுத்தலாக இருந்தாலும் பெண்ணை மாயப்பிசாசு என்று வெறுத்தாலும் பெண்மையைப் போற்றத் தவறியதில்லை. பெண்ணில்லாமல் ஆண் இல்லை ஏன் உலகமே இல்லை என்பதை,

"பெண்ணும் இல்லாமலே ஆணுமில்லை இது
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே!"[6] – என்கிறார் கொங்கணர்.

**கணவன் மனைவி பிணைப்பு:**

இன்றைய சூழலில் பல விவாகரத்துகள் நடைபெறுகின்றன. இதற்குக் காரணம் சரியான புரிதலும் இல்வாழ்வின் மேன்மை உணராததன் விளைவே. இதனால் குழந்தைகளும் உறவுகளும் பாதிப்புக்கு உள்ளாவதைக் காணமுடிகிறது. இதற்கு விடைகாணும் முகமாக, பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாத தெய்வம் இவ்வுலகில் இல்லை. பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால்தான் மனித வாழ்வே சிறப்படையும் என்ற கருத்தை சிவவாக்கியர்,

"மாதர்தோள் சேராததேவர் மாநிலத்தில் இல்லையே
மாதர்தோள் புணர்ந்தபோது மனிதர்வாழ்வு சிறக்குமே"[7] - என்ற அடிகளால் சிறப்பிக்கிறார்.

**இல்லறத்தின் சிறப்பும் கடமையும்:**

காடு மேடு அலைந்து உடல் வருந்தும் துறவு வாழ்வைவிட வரு விருந்து போற்றி தானும் உண்டு குடும்பத்தாரோடு மகிழ்ந்திருக்கும் இல்லறமே சிறந்தது என்றும் இறைவன் விரும்புவதும் இல்லறத்தையே என்பதை,

வருவிருந்தோடு உண்டுடுத்தி வளர்மனை சுகிப்பிரேல்
வருவிருந்தோன் ஈசனாகி வாழ்வளிக்கும் சிவாயமே"[8]

என்ற அடிகளால் இல்வாழ்வின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார். கொங்கணர்,

"தன்வீடு இருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே"[9] - என்ற அடிகளால் பிறனில் விழையாமை பற்றியும் தாயைப் போற்றும் உயர்ந்த பண்பையும் எடுத்துரைக்கிறார். மேலும்,

"மாதாவாய் வந்தே அமுதம் தந்தாள்மனை
யாட்டியாய் வந்து சுகம் கொடுத்தாள்
ஆதரவாகிய தங்கையானாள் நமக்கு

ஆசைக் கொழுந்தியும் மாமியானாள்"[10] - என்று இல்வாழ்வு நல்கும் அனைத்துப் பெண் உறவுகளையும் போற்றுகின்றார். அவரே,

"கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற

கற்பை யளித்தவரே வாழ்க"[11] - என இல்லாளை வாழ்த்தும் இல்லற மாட்சியும் இல்லறத்தை நல்கிய இறைவனையும் போற்றுகின்றார்.

**துறவறம்:**

துறவற வாழ்விற்கு மனத்தூய்மையே முதன்மையானதாம் என்பதால் "பாபஞ் செய்யாதிரு மனமே" [12] என்று வலியுறுத்துகிறார் கடுவெளியார். அவரே, ஐம்புலன்களை வென்ற துறவியர், அறியாமையாலோ ஊழ்வினையாலோ பிறர் நிந்திக்கும் போது கோபம் கொண்டு சாபம்அளிக்கக்கூடாது. பிறர் பொருள்மீது இச்சை கொள்ளக்கூடாது என்பதை,

"சாபங் கொடுத்திடலாமோ – விதி

தன்னை நம்மாலே தடுத்திடலாமோ

கோபம் கொடுத்திடலாமோ – இச்சை

கொள்ளக் கருத்தைக் கொடுத்திடலாமோ"[13]

என்று துறவு வாழ்வின் தூய்மையை எடுத்துரைக்கிறார். மேலும் பொய் வேதங்களையும் மனதில் கருமை கொண்ட பெண்களையும் தீயவர்களுடனும் சேராதே என்பதை,

"மைவிழியாரைச் சாராதே – துன்

மார்க்கங்கள் கூட்டத்தின் மகிழ்ந்து சேராதே"[14]

என்று எச்சரிக்கை செய்கின்றார். சிவவாக்கியரோ, பசுவிடத்து கறந்த பால் மீண்டும் மடிசேராது. கடைந்த வெண்ணெய் மீண்டும் மோரில் புகாது. பிரிந்த உயிரும் உடல் புகாது. பூவும் காயும் உதிர்ந்த பின்னர் மரம் புகாது. அதுபோல மனதை அடக்கிய ஞானிகள் சமாதியாகிவிட்டால் மீண்டும் அவர்கள் மண்ணில் பிறப்பதில்லை என்பதை,

"கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா

உடைந்துபோன சங்கின்ஓசை உயிர்களும் உடற்புகா

விரிந்தபூ உந்திர்ந்த காயும் மீண்டும்போய் மரம்புகா

இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே"[16]

என்று துறவு வாழ்வின் சிறப்பைப் போற்றிக் கூறுகின்றார்.

**போலித்துறவு:**

பிறர் பொருள் மேல் ஆசைப்பட்டு பூசை, நேமம், நிட்டை போன்றவற்றைச் சிறப்பாக செய்து தருகிறேன் என்று காசு பறிக்கும் பொய் வேடம் போடுபவரை,

"மோசம்செய்து அபகரிக்க முற்றிலும் அலைபவர்
பூசையோடு நேமநிட்டை பூரிக்கச்செய் பாதகர்'[17] என்றும்,
"சாதனைசெய்து எத்திச்சொத்து தந்ததைக் கவர்ந்துமே
காததூரம் ஓடிச்செல்வர் காண்பதும் அருமையே"[18] என்றும் கூறி அவர்களை நிந்திக்கவும் செய்கிறார் சிவவாக்கியர், மக்களும் இத்தகையவரை நம்பக்கூடாது என்றும் வலியுறுத்துகிறார்.

**சமூக அறம்:**

இன்றைய சூழலில் நிலவும் சாதிய வேறுபாடு, தீண்டாமை, ஆண் பெண் பேதம், சூது, களவு, போதைப்பொருள் அடிமை, பொருளாசை போன்ற அறமற்ற செயல்களால் மக்கள் பல இன்னல்களை அடைவதைக் காணமுடிகிறது. இந்நிலை சித்தர்கள் காலத்திலும் இருந்திருக்கிறது. என்பதையும் அன்றே அவர்கள் எதிர்ப்புக்குரலும் கொடுத்தனர் என்பதை அறியமுடிகிறது.

**சூது, பொய், மோசம் செய்யாதே:**

சூது, பொய், மோசம் ஆகிய மூன்றும் சுற்றத்தை விலகச் செய்யும். எனவே அவற்றைத் தவிர்த்து இறைவனிடம் பக்தி கொண்டு மனிதர்களிடம் அன்பு செலுத்து என்பதை,

"சொல்லரும் சூதுபொய் மோசம் – செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடு நாசம்
நல்ல பத்தி விசுவாசம் – எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாய் நேசம்"[19] என்று உரைப்பதன்மூலம் அறிவுறுத்துகிறார். மேலும், பூசை முதலிய சடங்குகளால் பிறர் பொருளை அபகரிக்கும் பாவச்செயலைச் செய்யக்கூடாது. கோபம் கொள்ளக்கூடாது. கோள் சொல்லக்கூடாது. போலியாக உன்னை பிறர் புகழ வேண்டும் என்று எண்ணக்கூடாது.கற்பனையில் மனதை அலையவிடக்கூடாது. பிறர் பழிக்கும் வாழ்வை நினைக்கக் கூடாது. பிறர் தாழும் படியான தீயச் செயல்கள் எதையும் செய்யக்கூடாது என்று தனிமனித வாழ்வியல் அறத்தை எடுத்துரைப்பதன்மூலம் நல்லவர் தொடர்பை நாளும் பெற்று அறம் சார்ந்த செயல்களைச் செய்ய வலியுறுத்துகிறார். இதனை சிவவாக்கியர்,

"போற்றும் சடங்கை நண்ணாதே – உன்னைப்
புகழ்ந்து பலரில் புகல ஓண்ணாதே
சாற்றுமுன் வாழ்வை எண்ணாதே பிறர்
தாழும்படிக்கு நீ தாழ்வைப் பண்ணாதே"[20] -

என்ற அடிகளால் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.

**கஞ்சா புகை பிடியாதே:**

கஞ்சா, அபின், புகை போன்றவற்றால் உடல் ஆரோக்கியம் கெடுவதுடன் மனமும் பாதிப்படைகிறது. குடும்பமும் தடுமாறிப்போகிறது. அதைத் தவிர்க்க வேண்டியே,

"கஞ்சா புகை பிடியாதே - வெறி
காட்டி மயங்கியே கட்குடியாதே
அஞ்ச உயிர் மடியாதே – புத்தி
அற்ற அஞ்ஞானத்தின் உள்படியாதே"[21]

என்று கஞ்சா, பீடி, கள் போன்றவற்றைத் தவிர்க்குமாறு கடுவெளியாரும்,

"கஞ்சா அடித்து நேரபினைத் தின்பதால்
நாயதாக நக்கிமுக்கி நாட்டினில் அலைவரே"[22]

என்று கஞ்சா, அபின் அடிப்பவரை நாட்டில் நாயாக அலைவர் என்று சிவவாக்கியர் நிந்தனை செய்வதையும் காணமுடிகிறது..

**தீண்டாமை ஒழிப்பு:**

மக்களிடையே உயர்வு தாழ்வு பேதத்தை ஒழித்து ஒற்றுமையை வலியுறுத்த விரும்பிய சிவ்வாக்கியர்,

"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே"[23] என்று சாதி வேறுபாட்டினைச் சாடுகிறார்.

**சமத்துவம் உரைத்தல்:**

அணியும் ஆபரணம் பலவாயினும் அவை பொன்னால் செய்யப்பட்டதுபோல் நாம் அனைவரும் பஞ்ச பூதங்களால் ஆனவர்களே. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய வாசல்களும் அனைவருக்கும் ஒன்றே, எனவே அனைவரும் சமமே என்பதை,

"சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகப் பொன்ஒன்றலோ
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே"[24]

என்று சாதியைச்சாடி சமத்துவத்தை வலியுறுத்துகிறார்.

**தூமையை விலக்கி பெண்மையைப் போற்றல்:**

மாதம் தோறும் வரும் தீட்டின்போதும், பிள்ளைப்பேற்றின் போது வரும் தீட்டின் காரணமாக பெண்கள ஒதுக்கப்படுவதும், அவமதிக்கப்படுவதும் இன்றைய சூழலிலும் காணமுடிகிறது. இத்தகைய தூமை என்று சொல்லி பெண்களை விலக்கி வைக்காதீர்கள். நாம் அனைவரும் இத்தூமையில் இருந்தே பிறந்தோம் இத்தூமை இன்றேல் நாம் இல்லை. இத்தூமையில்தான் இறைவனும் பொருந்தியுள்ளான் என்பதை,

“அறையினில் கிடந்தபோது அன்று தூமை என்கிறீர்
துறை அறிந்து நீர்குளித்த அன்று தூமை என்கிறீர்
பறையறைந்து நீர் பிறந்த அன்று தூமை என்கிறீர்
புரையிலாத ஈசரோடு பொருந்துமாறது எங்ஙனே”[25]

என்று வாழ்வின் தத்துவத்தை தெளிவுறுத்துகிறார். அதனை அறியாமல் தீட்டு என்று சொல்லி மற்றவரை ஒதுக்குவதில் என்ன பயன். யாரையும் ஒதுக்க கூடாது.

**முடிவுரை:**

19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரியாரின் புரட்சி சிந்தனை போக்கு 14 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலகட்டத்தில் தோன்றிய சித்தர் காலகட்டத்திலும் இருந்ததை அறியமுடிகிறது. குறிப்பாக சிவவாக்கியர், குதம்பை சித்தர், கடுவெளி சித்தர், கொங்கணர் பாடல்களில் காணமுடிகிறது. இவர்தம் பாடல்களில் தனிமனித வாழ்வே சமுதாய முன்னேற்றம் என்பதை உணர்த்தும் விதமாக வாழ்வியல் அறம் சார்ந்த கருத்துகளான இல்லறம், துறவறம், சமூக அறம் போன்றவை மிளிர்வதை அறியமுடிகிறது. இவற்றை. இன்றைய தலைமுறையினர் உணர்ந்து பயன்பெற வேண்டும்.

**அடிக்குறிப்புகள்:**

1. திருக்குறள் – நீதி இலக்கியம் பக் – 23
2. கொங்கணர் பாடல்கள் 82,
3. கொங்கணர் பாடல்கள் 86
4. சிவவாக்கியர் பாடல்கள் 324
5. அகத்தியர் ஞானம் 19
6. கொங்ணர் 72
7. சிவவாக்கியர் 528
8. சிவலாக்கியர் 531

9. கொங்கணர் 94
10. கொங்கணர் 65
11. கொங்கணர் – 45
12. கடுவெளி சித்தரும் ஆனந்த களிப்பு பல்லவி
13. கடுவெளி சரணம் 1
14. கடுவெளி சரணம் 24
15. இடைக்காட்டுச் சித்தர் 76
16. சிவவாக்கியர் 47
17. சிவவாக்கியர் 535
18. சிவவாக்கியர் 537
19. கடுவெளி சரணம் 2
20. கடுவெளி சரணம் 28
21. கடுவெளி சரணம் 29
22. சிவவாக்கியர் 539
23. சிவவாக்கியர் 39
24. சிவவர்கியர் 46
25. சிவவாக்கியர் 48

துணைநூற் பட்டியல்:


1. திருக்குறள் – நீதி இலக்கியம், க.த.திருநாவுக்கரசு, சென்னைப் பல்கலைக்கழகம், 1977
2. சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், இளமுனைவர் தமிழ்ப்பிரியன், கற்பகம் புத்தகாலயம், தியாகராய நகர் சென்னை – 600 017, 2023
3. தமிழ் இலக்கிய வரலாறு, 14 ஆம் நூற்றாண்டு, மு. அருணாசலம் எம்.ஏ.,காந்தி வித்தியாலயம், மாயூரம் – தஞ்சை ஜில்லா 1969.